யுள்ள கிராமம் எனவும், நான்கு பர்லாங் தூரத்தில் இரு பள்ளிகள் நடைபெறுவதாலும், அதற்குச் செல்வதற்கு இயற்கைத் தடைகள் இல்லை என்பதாலும் ஏற்பு அளிக்க மறுத்துவிட்டார்.

திரு. வீ. செல்லதுரை : மேற்படி பள்ளியைத் துவக்க விதி விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பக்கத்தில் இரண்டு, மூன்று பள்ளிகள் இருக்கிற காரணத்தினாலும், அங்கே மேலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலும், இன்னொரு பள்ளியை அனுமதித்தால் ஏற்கனவே நடைபெறுகிற பள்ளிகளில் உள்ள மாணவர்கள் இங்கே வந்து சேர்ந்தால், அங்கே எண்ணிக்கைக் குறைவு ஏற்படும் என்ற காரணத்தினாலும் ஏற்பு அளிக்கப்படவில்லை.

மருத்துவ முறை கருச்சிதைவு அனுமதிச் சட்டம்

* 317 வினு.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கருச்சிதைவு அனுமதிச் சட்டம் அமுலான நாளிலிருந்து இன்றுவரை எந்தெந்த மருத்துவ நிலையங்களில் எத்தனை கருச் சிதைவுகள் நடைபெற்றிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இப்பொழுது கருச்சிதைவு செய்து கொள்ளக்கூடிய தாய்மார்களின் உடல் நிலை பாதிக்கப் படுகிறதே, அதைக் கவனிக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக் கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உடல் நிலை கெடுதல் எதுவும் ஏற்படாத வகையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற ஒரு மருத்துவ சிகிச்சையின் மூலம் இந்த கருச் சிதைவு டாக்டர் களால் பரிசீலனை செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : மருத்துவ மனைகளில் கருச் சிதைவு செய்யக்கூடிய வசதி இருப்பது பல பெண்களுக்குத் தெரியவில்லை. கணவன்மார்களும் தெரிந்து கொண்டிருக்கக்

@ 498–501-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 மார்ச் 7]

கூடிய நிலேயில் இல்லே. அவர்கள் தெரிந்து கொள்கிற அளவுக்கு அரசு இதைப்பற்றி விளம்பரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா? அந்த வசதி ஒரு சில மருத்துவ மனேகளில்தான் இருக்கிறது. பரவலாக, குறிப்பாக எல்லா தாலுக்கா வட்ட மருத்துவ மனேகளிலும் இந்த வசதியை விரிவுபடுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எந்தெந்த மருத்துவ மனேயில் இதை ஏற்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக ஒரு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த போர்டு மூலமாக, ஏறத்தாழ 55 மருத்துவ மனேகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே 27 மருத்துவ மனேகள் இப்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் 27 மருத்துவ மனேகளில், தாலுக்கா மருத்துவ மனேகள் உள்பட, விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். கருச் சிதைவு என்பது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் போன்று பிரசாரம் செய்யப்பட வேண்டிய ஒன்று அல்ல.

ஆனல், கருச்சிதைவு என்பது—உடல் நலக் குறைவு ஏற்படு வதற்கு அந்தக் கரு காரணமாக இருக்குமானல், அது மனக் கோளாறை உண்டாக்கக்கூடிய நிலே இருக்குமானல் அல்லது வேறு நோய் நொடி வரக்கூடிய நிலேயில் இருக்குமானல் அல்லது குடும்பக்கட்டுப்பாடு முறையிலே ஏற்பட்ட தவறு காரணமாக அந்தக் கரு ஏற்பட்டிருக்குமானல், இப்படி தனிப்பட்ட நிலேமை களிலேதான் இந்தக் கருச் சிதைவு முறையானதாகும். இப்படி சட்டப்படியும், முறைப்படியும் கருச்சிதைவு செய்துகொள்ள வேண்டியவர்களுக்கு உதவி செய்வதற்காக இந்த வசதி அமைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இது மெல்ல மெல்லத்தான் மக்க ளிடையே தெளிவை உண்டாக்க வேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: கருச்சிதைவு செய்யப்படும்பொழுது ஏராளமான இரத்தம் வெளிப்படுகிறது. அந்த நேரத்தில் கருச் சிதைவு செய்யும் ஆஸ்பத்திரிகளில் ப்ளட் பாங்கில் ப்ளட் இல்லாத காரணத்தினல் சில பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று தகவல் வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் இரத்தத்தை முதலிலே ஸ்டாக் செய்திருந்தால்தான் கருச்சிதைவு செய்ய வேண்டும் என்று அரசு ஆணேயிடுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கருச்சிதைவில் இரத்தம் வெளிப்படுகிறது என்று சொல்கிறார்கள். கருவை உண்டாக்குவதற்குக் கூட, இரத்தம் வெளிப்பட்டு ஏற்படுகிற விளைவுகளினாலதான் இப்படிப்பட்ட விளைவு உண்டாகிறது. ஆனால், இப்படிப்பட்ட அனுமதிக்கப்பட மருத்துவமனைகளில் தகுந்த ஏற்பாடு இல்லாவிட்டால் நிச்சயம் கருச்சிதைவு செய்ய மாட்டார்கள். ஏற்பாடுகளைக் குறைவாக வைத்துக்கொண்டு கருச் சிதைவை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. இதைக் கண்காணிப்பதற்கான முறை இருக்கிறது. வேறு சில இடங்களில், அனுமதி இல்லாத இடங்களில் இப்படி கருச்சிதைவு செய்கிறார்கள் வேறு மருத்துவ ஆற்றலைப் பயன்படுத்தி. அங்கேயெல்லாம்தான் அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படும் என்று கருதுகிறேன். மேலும், அதுபற்றி உறுப்பினர் அவர்கள் விவரம் தருவார்களேயானால், அந்த விவரத்தை அடிப்படையாக வைத்து, விசாரிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் ஏப்ரல் 1972 முதல் அக்டோபர் 1973 வரையில் உள்ள கணக்கு விவரம் தரப்பட்டிருக்கிறது. இதிலே யாருக்காவது உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறதா? அப்படி ஏதாவது தகவல் அமைச்சர் அவர்கள் கையிலே இருக்கிறதா? அப்படி உயிரிழப்பு ஏற்பட்டிருந்தால், அதற்கான காரணம் என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி உயிர் இழப்பு ஏற்படவில்லை. உயிர் இழப்பு ஏற்படக்கூடிய நிலையில் கருச் சிதைவு செய்யமாட்டார்கள். பாதுகாப்பு இருக்கக்கூடிய கட்டத்தில் மட்டும்தான் இந்தக் கருச் சிதைவு செய்யப்படும். ஸக்ஷன் பம்பு என்ற ஒரு புது முறையைக் கையாண்டு கருவை உள்ளே இருந்து வெளியே கொண்டுவரக் கூடிய ஒரு சிகிச்சை முறை கருச்சிதைவு செய்வதற்குக் கையாளப்படுகிறது. அது மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான, தகுதியான பாதுகாப்பு உள்ள முறையாகும். அதில் ஏதேனும் குற்றம் ஏற்படுமேயானால், அதைப்பற்றித் தெரிவித்தால், அது பரிசீலிக்கப்படும்.

1974 மார்ச் 7]

(முற்பகல் 9-30)

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கருச்சிதைவு செய்வது கொடிய பாவம் என்று சில மதவாதிகள் கூறுகிறார்கள். அரசின் கருத்துக்கு மாறுபட்ட, அவர்கள் கருத்தைப்பற்றி அரசு என்ன கருதுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முறையான வாழ்க்கை நடத்தி, கணவன் மனைவி உறவில் கேடு இல்லாமல் இருந்து, பிறக்கின்ற குழந்தையினால் உடல்நலம் கெடும், குடும்பம் கெட்டுவிடும் என்று யாராவது வேண்டுமென்றே அந்த குழந்தையின் கருவை சிதைக்கத் தூண்டுவார்களேயானால் அது பாவம் தான். பெற்ற பிள்ளையை வளர்க்க முடியாது, தாய்க்கு உடல்நலம் கெடும் அல்லது பைத்தியம் பிடிக்கும் நிலை ஏற்பட்டு, தகப்பன் பிச்சைக்காரன் ஆகின்ற நிலை ஏற்படும் என்று தெரிந்து கருச்சிதைவு செய்வதானால் அது புண்ணியமாகும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், இந்த 'சக்ஷன் பம்ப் இன்செர்ஷன்' நம்முடைய அரசாங்க மருத்துவ மனைகளில் எத்தனை இடங்களில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்ட எல்லா மருத்துவ மனைகளிலும் இருக்கிறது ; இந்த முறை தான் கையாளப்படுகிறது.

விஷக்குடிக்கு மருத்துவம்

*318 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசினர் மருத்துவ மனையில், விஷம் குடித்தவர்களைக் காக்கும் கருவி ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.